[18th July 1964

ஜாயிண்டு ரிஜிஸ்டிரார் தஞ்சாவூர் ஸ்பெஷல் ஸ்கீமை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதை விசாரித்து உடனே எழுதவேண்டும் என்று சர்க்கார் அவர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறது.

கொளவாய் ஏரி

* 542 கேள்வி—திரு. செ. கோ. விசுவநாதன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரிலுள்ள "கொளவாய் ஏரி" யை சீரமைக்கும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?

(இ) ஆமெனில், அந்தத் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) கொளவாய் ஏரியைச் செப்பனிடத் திட்டம் ஏதும் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) There is no proposal to repair the Kolavoy eri.

(*b*) Does not arise.

திரு. முனு. ஆதி: இந்தக் கொளவாய் ஏரியில் தண்ணீர் எப்பொழுதும் வற்றுவதில்லை. அதை விவசாய நிலங்களுக்குப் பாய்ச்சுவதற்கு வழிவகை செய்ய அரசாங்கம் முன்வருமா? அல்லது இப்பொழுது எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்கிறது என்ற தகவலை அறியலாமா?

கனம் திரு. பூ. கக்கன்: இது பெரிய ஏரி தான். 680 எக்கர் நிலங்களுக்கு அந்த ஏரி பயன்படுகிறது. உள்வாய் புறத்தில் நிறைய நிலம் இருக்கிறது. கண்மாயை ஆழப்படுத்துவதற்கு உத்தேசமில்லை. உள்வாயிலுள்ள நில விஸ்தீரணம் ஜாஸ்தியாக இருப்பதால், அந்த நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தலாமா என்பது பற்றி பரிசீலனையில் இருக்கிறது.

Stainless steel sheets

* 543 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the basis on which quotas of stainless steel sheets for making utensils are allotted for Madras State;

(*b*) the steps taken for increasing the allotment; and

(*c*) how distribution is made for the manufactures in the State?